*594 வினா.—திரு. கே. என். குமாரசாமி :
திரு. சு. துரைசாமி :
திரு. மே. சி. தூயமணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிகள், பேரூராட்சிகளை நெல்லித்துறைக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளக் கோரி சூலூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நெல்லித்துறைத் திட்டம் குறிப்பிட்ட பஞ்சாயத்துக் களுக்கு வேண்டிய குடிநீர் அளவுக்கு மட்டுமே அமைக்கப்பட்டிருப் பதால் அத்திட்டத்தில் மேற்கொண்டு வேறு எந்த ஊர்களையும் சேர்த்துக்கொள்ள இயலாது.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல்லித்துறைத் திட்டத்தின்கீழ் காரமடை ஊராட்சிமன்றம், தேக்கம்பட்டி ஊராட்சிமன்றம், மருதூர் ஊராட்சிமன்றம் இவற் றிற்குக் குடிநீர் தேவை என்று அந்தப் பகுதிகளிலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் நெல்லித்துறைத் திட்டம் தங்கள் பகுதிகளில் செயல்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது சேர்க்கப்பட் டுள்ள ஊர்கள், கோவை நகராட்சி, சிங்கநல்லூர் நகராட்சி, பெரிய நாய்க்கன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம், துடியலூர், வெள்ளக்கிணறு, கணபதி, சங்கனூரர், சூலூர், இருகூர், பல்லடம், சோமனூர், கவுண்டன்பாளையம். இவை இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஊர்களின் பெயர்களாகும்.

திரு. சு. துரைசாமி : முதல் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் சில ஊர்களை மட்டும் இங்கு குறிப்பிட்டார்கள். இப்போது திருப்பூரை எடுத்துக்கொண்டால் 1,75,000 மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள குடிநீர்த் திட்டம் 80,000 மக்கள்தான் 1971-ல் இருக்கக்கூடும் என்ற கணக்கின் அடிப்படையில் அமைக்கப்பட்ட

திட்டமாகும். எனவே திருப்பூரையும் இந்த நெல்லித்துறை திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டு குடிநீர் வாரியமும் இதை ஏற்றிருப்பதாக அறிகிறேன். அப்படி வளர்ச்சி பெற்று வருகிற நகரத்திற்குப் பல்லடத்திலிருந்து கொண்டு வர வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அதையும் சேர்ப்பதற்கு இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நிதி அளவு, நீர் அளவு இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்.

திரு. என். மருதாசலம் : நெல்லித்துறைத் திட்டம் விவசாயிகளுக்குப் பயன்படும்படிக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிநீருக்குத் தேவையான அளவிற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு எல்லாப் பகுதிகளுக்கும் இயலாத சூழ்நிலையில் விவசாயத்தைப் பற்றி யோசிப்பது கடினமானது.

தீ அணைப்பு நிலையங்கள்.

*595 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் தீ அணைப்பு நிலையங்கள் Fire stations ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சமீபத்தில் ஃபையர் சர்வீஸ் தனி இலாகாவாகப் பிரிக்கப்பட்டு வட மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும், தென் மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும் வந்து, பல இடங்களிலும் இம்மாதிரி தங்கள் ஊர்களிலும் ஃபையர் சர்வீஸ் ஸ்டேஷன்ஸ் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு புதிதாக எந்தெந்த இடங்களில் திறப்பதற்கு ஆலோசனை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.